பக்கங்கள்: 11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 16 செவ்வாய்க்கிழமை 02.11.2021 கதிர் 362

### இது ரகசியம் அல்ல!

பத்திரிகையாளர்களாகிய எங்களைக் கண்டதும் நண்பர்கள், தெரிந்தவர்கள் – ஏன் அரசியல்வாதிகள் கூட – கேட்கும் கேள்வி ஒன்று உண்டு. அது – "அடுத்தது என்ன?" – என்பதுதான்.

அதுவும் தென்னிலங்கை அரசியல் போகும் பக்கம்02

# இனப்படுகொலைக்கு கோட்டாவே பொறுப்பு!

## கிளாஸ்கோ நகரில் புலம்பெயர் தமிழர்கள் மாபெரும் போராட்டம்



ஐ.நாவின் காலநிலை மாற்றம் தொடர்பாக பிரமாண்டமான அனைத்துலக மாநாட்டை மையப்படுத்தி, இலங்கையில் தமிழினத்தின் மீது இடம்பெற்ற இனப்படுகொலைக்கு நீதி கோரி, மீண்டும் ஒரு வெற்றிகரமான போராட்டத்தை புலம்பெயர் தமிழர்கள் நேற்று நடத்தியுள்ளனர்.

இதன்மூலம், தமிழனத்தின் மீது நடத்தப்பட்ட, இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்குரிய குற்றவாளிகள் நீதியின் முன்னால் நிறுத்தப்படும் வரை புலம்பெயர் தமிழர்களின் எதிர்வினைகள் தணியப் போவதில்லை என்ற தீவிரமான செய்தி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசுக்கு அனைத்துலக அரங்கில் மிகப்பெரிய அவமானத்தை வழங்கும் கோஷங்கள் மற்றும் பதாதைகளுடன் நேற்றைய போராட்டங்கள் இடம்பெற்றன. 2

## ஜனாதிபதி நாடு திரும்பியதும் முக்கிய அமைச்சர் பதவி துறப்பு

### வெளியானது பரபரப்பு தகவல்

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசிலுள்ள முக்கிய அமைச்சர் ஒருவர் இராஜிநாமா செய்யவுள்ளார் எனத்தகவல் வெளியாகியுள்ளது.

அவரின் இராஜிநாமா கடிதம் தயாராகவே இருக்கின்றது எனவும், ஸ்கொட்லாந்து சென்றுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியதும் அவர் பதவி துறப்பார் எனவும் சிங்கள இணையத்தளமொன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த அமைச்சர் பதவி விலகிய பின்னர், அரசுக்குள் மாற்றங்கள் ஏற்படக்கூடும் எனவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

## மோடியுடன் சில நிமிடங்கள் நேரில் உரையாடிய கோட்டா



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று உத்தியோகபூர்வமற்ற உரையாடலில் ஈடுபட்டார்.

ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் இடம்பெற்று வரும் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் கலந்துகொண்டுள்ள இந்தியப் பிரதமர் மோடி, 22 உத்தியோகபூர்வ நிகழ்வுகளில் பங்கேற்கின்றார். இவற்றில் ஒரு நிகழ்விலும்கூட இலங்கை ஜனாதிபதி கோட்டாபயவை சந்திப்பதற்கான ஏற்பாட்டை மோடி தரப்பு செய்யவில்லை. இந்நிலையில், நேற்று மாநாட்டின் இடையே மோடியை நேரில் சந்தித்த கோட்டாபய, சில நிமிடங்கள் நின்றவாறு பேசினார்.

## ரஞ்சனுக்காகப் பதவியை பணயம் வைக்கும் ஹரின்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ரஞ்சன் ராமநாயக்கவுக்குப் பொதுமன்னிப்பு வழங்க வேண்டும். அவர் அவ்வாறு செய்தால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பதற்கு நான் தயார்.

– இவ்வாறு அறிவிப்பு விடுத்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான ஹரின் பெர்ணான்டோ.

ஐக்கிய மக்கள் சக்தியின் வத்தளைத் தொகுதிக்கான அலுவலகத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரஞ்சன் ராமநாயக்க என்பவர் நிச்சயம் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டியவர். எனவே, சிறைத் தண்டனை 2

## தொடர்கிறது சீரற்ற காலநிலை இருவர் பலி; 5,373 பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் இருவர் பலியாகியுள்ளனர். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

இரத்தினபுரி, நுவரெலியா, கண்டி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், பதுளை மற்றும் புத்தளம் ஆகிய ஏழு மாவட்டங்களில் சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது.

இதனால் ஆயிரத்து 344 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 373 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநியால், 352 வீடுகள் பகுதியளவிலும் இரு வீடுகள் முற்றாகவும் சேதமடைந்துள்ளன. 2

## மேலும் 17 பேர் மரணம்

நாட்டில் மேலும் 17 பேர் கொரோனாத் தொற்றால் மரணித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 11 ஆண்களும், 06 பெண்களும் அடங்குகின்றனர் என்று 2

## கம்பஹாவில் பஸிலை வீழ்த்துவேன்!

### ஹரின் நேற்று சூளுரை



ஊவாவில் சசிந்திர ராஜபக்ஷவை வீழ்த்தினேன். தற்போது கம்பஹா மாவட்டத்துக்கு வந்துள்ளேன். இனி பஸில் ராஜபக்ஷவுடனும் அரசியல் ரீதியில் மோதுவேன்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வத்தளை தொகுதிக்கான அலுவலகம் நேற்று திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் 2

## வவுனியாவில் ஆரம்பப் பிரிவு ஆசிரியருக்குக் கொரோனா!

(வவுனியா நிருபர்)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பப் பிரிவுக்குக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தனது உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டதையடுத்து குறித்த ஆசிரியர் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே அவருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அவரைச் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போக்கில் அடுத்து என்ன நடக்கப்போகின்றது என்ற கேள்வி எல்லோர் மனதிலும் இயல்பாகவே எழும். நாங்கள் கூட தென்னிலங்கையில் விடயம் தெரிந்த தரப்புகளுடன் உரையாடும்போது கேட்கும் கேள்வியும் இந்தச் சாரப்படத்தான் இருக்கும்.

நேற்றும் தென்னிலங்கையின் மூத்த ஊடகவியலாளருடன் உரையாடிக் கொண்டிருந்தபோது இது போன்ற என் கேள்விக்கு அவர் சொன்ன பதிலை இன்று வாசகர்களுடன் பகிர விரும்புகிறேன்.

"எல்லா அரசியல் தலைவர்களுக்கும், அரசியல்வதிகளுக்கும் தங்களின் மக்கள் செல்வாக்கு மீது, மக்கள் தம் மீது வைத்திருக்கும் அபிமானம் குறித்து, எப்போதும் அபரிமிதமான நம்பிக்கை உண்டு.

இப்போது தெற்கில் அதி உத்தமரும் பங்காளி கட்சிகளும், பகிரங்க வெளிக்கு விடயம் வரும் வகையில் முரண்டு பிடித்துக் கொண்டு விட்டனர். இனி மீண்டும் உறவுக்கு ஒட்டுப்போடுவது நீண்ட காலத்துக்குத் தாக்குப் பிடிக்கப்போவதில்லை. இரு தரப்புகளுமே தங்கள் மக்கள் செல்வாக்கைப் பற்றி இப்படித்தான் அபரிமிதமான கற்பனையில் உள்ளன.

இலங்கையில் அதிகாரத்தில் இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாஸா, சந்திரிகா, மஹிந்தர் போன்ற ஜனாதிபதிகள் வித்தியாசமானவர்கள். பலம் வாய்ந்தவர்கள். ஆனால் டி.பி.விஜேதுங்க, மைத்திரிபால சிறிசேன போன்றவர்கள் அப்படியானவர்கள் அல்லர். அந்த வகையறாவைச் சேர்ந்தவர்தான் கோட்டாபய ராஜபக்ஷவும் போலும். ஜனநாயக அரசியலில் தமது நிலைமை தொடர்பில் ஆழமான உறுதி கொண்டவரல்லர்.

நான் முதல் சொன்ன வகையைச் சேர்ந்த ஜனாதிபதிகள் ஜனநாயகத்தில் தங்கள் பலத்தில் அதிக நம்பிக்கை வைத்து அரசியல் காய்களை நகர்த்தியவர்கள் அல்லது அரசியலை எதிர்கொண்டவர்கள். பொதுத் தேர்தல்களுக்கு முன்னர், தாங்கள் போட்டியிடும் ஜனாதிபதித் தேர்தல்களை எதிர்கெண்டவர்கள் அல்லது தாமாக நடத்தி அத்தேர்தலை முதலில் சந்தித்தவர்கள்.

டி.பி.விஜேதுங்க கூட முதலில் ஒரு ஜனாதிபதித் தேர்தலைத் தாமாக நடத்தி அதை எதிர்கொள்ளத் துணியவில்லை. முதலில் பொதுத் தேர்தலுக்கு இடம்விட்டார். அதன் முடிவைப் பார்த்து, அதற்குப் பின்னால் வந்த ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளாமல் பின் வாங்கினார்.

மைத்திரிபால சிறிசேனவும் அப்படித்தான். திரும்பவும் ஜனாதிபதித் தேர்தலில் குதிக்க அவருக்கு வாய்ப்பு இருந்தது. ஆனால் அதற்கு முன்னர், முதலில் குறுக்கு வழியிலேனும் நாடாளுமன்றத்தைக் கலைத்து, ஒரு பொதுத் தேர்தலை நடத்த முயன்றார். அதில் நிலைமையைப் பார்த்து, பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் தாம் மீளக் குதிக்கலாம் என்று திட்டமிட்டார். அதிகாரமில்லாமலேயே முற்கூட்டி நாடாளுமன்றத்தைக் கலைத்த அவரது நடவடிக்கைக்கு உயர்நீதிமன்றம் ஆப்பு வைத்தது. அதனால் பொதுத் தேர்தலை நடத்த முடியாமல் போனது. அதனால் ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிடாமல் கழன்று கொண்டார்.

ஆனால் கோட்டாபயவின் நிலைமை சற்று மாறுபாடானது. இருபதாவது திருத்தம் மூலம் நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைக்கும் அதிகாரம் அவருக்கு உண்டு.

தாம் முதல் தடவை ஜனாதிபதியாக வந்த பின்னர் - பதவியேற்ற பின்னர் - அப்போதிருந்த நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் எந்தத்தினம் அவரது கைக்கு வந்ததோ, அன்றைய தினமே நாடாளுமன்றத்தைக் கலைத்தவர் அவர். அப்போதைய சட்டப்படி - 19ஆவது திருத்தப்படி - நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் நாலரை ஆண்டுகள் முடிந்த பின்னர்தான் அதனைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வரும். அந்த நாடாளுமன்றத்தின் நான்கரை ஆண்டு கால பதவிக் காலம் முடிந்த அடுத்த நாளே அதைக் கலைத்தார் ஜனாதிபதி கோட்டாபய.

இப்போது 20ஆவது திருத்தத்தின் கீழ் தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் இரண்டரை ஆண்டுகள் கடந்த பின்னர்தான் அதை முற்கூட்டியே ஜனாதிபதி கலைக்க முடியும். அந்த இரண்டரை ஆண்டு காலத்தில் சரி அரைவாசியை - ஒன்றேகால் ஆண்டுப் பதவிக் காலத்தை - இந்த நாடாளுமன்றம் கடந்து விட்டது.

இனி, எஞ்சிய ஒன்றே கால ஆண்டு காலத்தை இப்படியே இழுத்துப் பறித்துக் கடத்துவார் கோட்டாபய. தேவைப்பட்டால் பங்காளிக் கட்சிகளை ஆட்சிக் கூட்டிலிருந்து வெளியேயும் அனுப்புவார். அதனால் கேடு ஒன்றும் அவருக்கு வந்து விடப் போவதில்லை. இந்த அரசு கவிழாது. அறுதிப் பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் இழக்கும் நிலைமை அவருக்கு இல்லை. இப்போது மட்டுமட்டாக இருக்கும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பன்மையை இழக்க வேண்டி நேரும். அதனால் அவருக்கோ, ஆட்சிக்கோ பங்கம் ஏதும் நேர்ந்து விடாது. புதிய அரசமைப்பைக் கொண்டுவருவது தான் சாத்தியப்படாமல் போகும். அதில் அவருக்கு அதிகம் சிரத்தை இல்லை. இருபதாவது திருத்தம் தந்திருக்கும் கட்டுமட்டில்லாத அதிகாரங்களுடன், இந்த அரசமைப்பின் கீழ் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையே தமது எதேச்சாதிகா ரத்தை நிலை நிறுத்தித் தொடரப் போதுமானது மட்டுமல்ல, மிகவும் பொருத்தமானதும் கூட என்ற கருத்தில் தனது நிலைமையை அவர் திருப்தியானதாக உணர்வார்.

இன்னும் ஒன்றே கால் வரும் கடந்ததும், 2023முற் பகுதியில் நாடாளுமன்றக் கலைத்துப் பொதுத்தேர்தல் நடத்தித் தமக்கு விருப்பமான - தோதான - புதிய நாடாளுமன்றை உருவாக்கிக் கொண்டு, 2024 இல் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளலாம் என்று அவர் இப்போதைக்கு யோசிப்பார்; யோசிக்கின்றார்.

எது, எப்படி என்றாலும் இப்போது அரசியல் போகின்ற போக்கு விரைவில் மீள ஒரு பொதுத்தேர்தலுக்குத்தான் கட்டியும் கூறுகின்றது.

அது மாத்திரமல்ல, மீள் பொதுத் தேர்தலுக்குத்தான் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் வலியுறுத்துகின்றது. அப்படியான ஒரு கோரிக்கைக்கு செவிசாய்ப்பதன் மூலம் தற்போது கெம்பிக் கொண்டிருக்கும் பங்காளிக் கட்சிகளுக்குப் பாடம் புகட்ட கோட்டாபய ராஜபக்ஷ இணங்குவாராயின் மொட்டுக்கட்சியினரும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. போன்றவையும் ஒன்றிணைந்து, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் முற்கூட்டிய தேர்தலுக்கு நாடாளுமன்றத்தில் ஒரு பிரேரணையை நிறைவேற்றி, இப்போது எந்தச் சமயத்திலும் பொதுத் தேர்தலுக்கு வழி சமைத்து விட முடியும் என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

எது, எவ்வாறாயினும் உரிய வரிசைக் கிரமப்படி பார்த்தால் அடுத்து முதலில் நடக்க வேண்டியது ஜனாதிபதித் தேர்தல். அதன் பின்னர் ஒரு வருடம் கழித்துதான் பொதுத் தேர்தல் நடக்க வேண்டும். ஆனால் நிச்சயம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே பொதுத் தேர்தலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடத்தி விடுவார்" - என்றார் அந்த ஊடக நண்பர்.

அவர் கூறிய விடயங்களில் சில ஆழமான கருத்துகள் இருக்கின்றன என்று நான் நினைக்கின்றேன். நீங்கள் என்ன கூறுகின்றீர்கள் வாசகர்களே...?

– மின்னல் –

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுயதனிமைப்படுத்துவதற்கும், அவருடன் தொடர்புடையவர்களை இனங்காணப் பதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தரம் 5 வரை பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் கற்பிக்கும் குறித்த ஆசிரியரும் பாடசாலைக்குச் சென்று தரம் 1 மாணவர்களுக்குக் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (100)

## கம்பஹாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

பதுளை மாவட்ட மக்கள் மீது ஏற்பட்ட கோபத்தால் நான் கம்பஹாவுக்கு வரவில்லை. இன்னும் 10 ஆண்டுகள்தான் அரசியல் செய்வேன். அந்த காலப்பகுதிக்குள் தேசிய மட்டத்தில் அரசியலில் ஈடுபட வேண்டும். மிகப்பெரிய பதவிகளுக்குப் போட்டியிட வேண்டும்.

ஊவாவில் சசீந்திர ராஜபக்ஷவை வீழ்த்தினேன். கம்பஹாவில் பஸில் ராஜபக்ஷவுக்கும் சவால் விடுப்பேன் - என்றார்.

---

## ரஞ்சனுக்காகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுபவித்துவரும் அவருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கினால் எம்.பி. பதவியைத் துறக்க நான் தயார் - என்றார்.

---

## மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 760 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் மேலும் 566 பேர் கொரோனாத் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 41 ஆயிரத்து 639 ஆக அதிகரித்துள்ளது.

---

## தொடர்கிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்தில் 79 குடும்பங்களைச் சேர்ந்த, 292 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## இனப்படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது குறித்து மேலும் தெரிய வருகையில்,

தமிழர் தாயகத்துக்கு நீதி கோரும் வகையில் மீண்டும் ஒரு போராட்டம் ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நேற்று இடம்பெற்றது.

நீண்டதூரம் பயணம் செய்து லண்டன் உட்பட்ட நகரங்களில் இருந்து சென்ற ஆயிரக்கணக்காக புலம்பெயர் தமிழ் மக்கள் தமது தூக்கம் மற்றும் களைப்பை மறந்து குளிரான காலநிலைக்கு மத்தியில் இந்தப் போராட்டத்தில் நேற்று உணர்வுபூர்வமாகப் பங்கெடுத்தனர்.

தமிழினத்தின் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கு இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்புக்கூற வேண்டும் என்ற கோஷங்கள் அங்கு தீவிரமாக ஒலித்தன.

தமிழினத்தின் மீது நடத்தப்பட்ட போர்க் குற்றங்களுக்கு உரிய குற்றவாளிகள் நீதியின் முன்னால் நிறுத்தப்படும் வரை புலம்பெயர் தமிழர்களின் எதிர்வினைகள் தணியப்போவதில்லை என்ற தீவிரமான செய்திகளும் அங்கு விடுக்கப்பட்டன.

நேற்றுக் காலை மாநாட்டு மண்டபத்துக்கு அருகாமையில் போராட்டம் ஆரம்பிக்க முன்னரே, இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது குழுவினர் தங்கியிருந்த கிளாஸ்கோ ஹல்ரன் டபுள் றீ நட்சத்திர விடுதியில் ஒரு திடீர் முற்றுகைப்போராட்டம் வெடித்தது.

ஆயினும் முற்பகல் வேளையில் அதிகளவு பிரிட்டன் பொலிஸாரின் பாதுகாப்பு வளையத்துடன் கோட்டாபயவும் அவரது குழுவினரும் மாநாட்டு மண்டபத்துக்குக் கொண்டு செல்லபட்டனர்.

இதையடுத்து கோட்டாபய தங்கியிருந்த நட்சத்திர விடுதி முன்றலில் முற்றுகைப் போராட்டத்தை நடத்திய மக்கள், உடனடியாக மாநாட்டு மண்டபத்துக்குத் திரும்பி அங்கும் போராட்டத்தை நடத்தினர்.

இந்தப் போராட்டம் மாலை 3 மணி வரை இடம்பெற்று உறுதியுரையுடன் முடிவுக்கு வந்தது.

ஐ.நாவின் மிகப் பிரமாண்டமான அனைத்துலக மாநாட்டை மையப்படுத்தி புலம்பெயர் தமிழ் மக்கள் நடத்திய இந்தப் போராட்டம் இலங்கைத் தரப்புக்குக் கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

(மற்றொரு செய்தி 07ஆம் பக்கத்தில்...)

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
**மின்னஞ்சல் -**
kalaikkathiradvt@gmail.com
**தொலைபேசி இலக்கம் -**
**076 443 8622**




இனிய
தீபாவளி
வாழ்த்துக்கள்
"சுத்தமான நீர், சுகமான வாழ்வு"
SMART
NEXUS
NEXT
YARL SMART
SMART
RO WATER PURIFIER
SMART
OPEL
மாபெரும் விலைக் கழிவு
Rs.29,000/=
Rs.35,000/=
TDS <2000PPM
இலவச நீர் பரிசோதனையுடனும்,
மிகக் குறைந்த விலையிலும்,
அதிகபட்ச உத்தரவாதத்துடனும்,
எங்கும் பெறக்கூடிய உதிரிப்பாக வசதிகளோடும்,
வாழ்நாள் முழுவதும் பராமரிப்பு சேவைகளுடனும்,
24 மணித்தியாலத்தினுள் முறைப்பாடு திருத்திக்கொடுத்தல்.
YARL SMART Water Solution (Pvt) Ltd.
"Smart Water, Smart Life"
No.341 K.K.S Road, Jaffna.
Karadippoku Junchtion Jaffna Road, Kilinochchi.
yarlsmartwater@gmail.com | www.yarlsmartwater.com

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பேரினவாதப் புதுக்கூட்டு

இலங்கை அரசியலில் மிகப் பிந்திய பரபரப்பை ஏற்படுத்திய விடயம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருக்கும் 'ஒரே நாடு; ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணிதான்.

சர்ச்சைக்குரியவரான – பல தரப்புகளினாலும் குழப்படிக்காரர் என்ற வர்ணிக்கப்படுகின்ற – பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் – வண. கலகொட அத்தே ஞானசார தேரர் இந்தச் செயலணிக்கு நியமிக்கப்பட்டமைதான் பலருக்கும் பேரதிர்ச்சியைத் தந்திருக்கின்றது.

இலங்கை நாடு பௌத்த, சிங்களவர்களுக்கு மட்டுமே உரியது என்பது போன்ற தீவிரப் போக்கில் பேசியும், காரிய மாற்றியும் வருபவர் ஞானசார தேரர். பௌத்த, சிங்களப் பேரினவாத வெறித்தனத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தி வரும் ஓர் இனவாதி அவர்.

அவரை இந்தச் செயலணிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்தமை பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப் போக்குத் தொடர்பில் இந்த இலங்கைத் தீவின் சிறுபான்மையின மக்களுக்கும், நடுநிலைவாதிகளுக்கும், பொது அவதானிகளுக்கும் கடும் சீற்றத்தையும், சந்தேகத்தையும், எரிச்சலையும் தந்து நிற்பது கண்கூடு.

இலங்கை அரசியலில் பௌத்த, சிங்களப் பேரினவாத வெறியைத் தூண்டிவிட்டு அதன் மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியவர் கோட்டாபய ராஜபக்ஷ. பௌத்த, சிங்கள வாக்குகளினால் மட்டுமே தாம் வெற்றி பெற்றார் என்று பகிரங்கமாக அறிவித்தமை மூலம் தமது செயற்போக்கு எத்திசையில் அமையும் என்பதையும் கோடி காட்டி நிற்பவர் அவர்.

அவரே, இன்னொரு பௌத்த, சிங்கள இனவெறிப் போக்குத் தேரரைத் தேடிப் பிடித்து இந்த செயலணிக்கு நியமித்திருக்கின்றார் என்பது மிக மோசமான நிலைமை.

அதுவும், இந்த நாட்டின் சிறுபான்மையினரான தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட சிறப்புரிமைகளை அடியோடு பறித்து அகற்றுவதற்கான பேரினவாத வெறிச் சிந்தனையின் பிறப்பாக்கமே 'ஒரே நாடு; ஒரே சட்டம்' என்ற கோட்பாடு எனும் அச்சம் சிறுபான்மையினர் மனதில் ஆழமாக வேரோடி இருக்கையில், அந்தப் பேரினவாத வெறிப்போக்கு தேரரும், அதே செயற்போக்கில் உழன்று கொண்டிருக்கும் ஜனாதிபதியும், அதே போன்ற ஒரு விடயத்துக்காக ஒன்று சேர்வது இயல்பாகவே சிறுபான்மையினரைப் பேரச்சத்துக்குள் ஆழ்த்தும் நடவடிக்கைதான்.

சிறுபான்மையினரின் பழக்க வழக்கங்கள், வழக்காறுகள், பண்பியல் ரீதியான நடத்தைகள், வாழ்க்கை முறைமைகளை சட்ட ரீதியாக உறுதிப்படுத்துவதற்காக அவர்களுக்கென விசேட சட்டங்கள், நூறாண்டுகள் கடந்தவையாக இங்கு நடைமுறையில் உண்டு. குறிப்பாக வடக்கு மக்களுக்குத் தேசவழமைச் சட்டம், முஸ்லிம் மக்களுக்கு இஸ்லாமியச் சட்டம், ஷரீயாச் சட்டம் போன்றவை.

'ஒரே நாடு; ஒரே சட்டம்' என்ற கோட்பாடு, இலங்கைத் தீவின் தமிழர் தேசம், சிங்களவர் தேசம் என்ற காலாதிகால உண்மையை மறுதலித்து, சிங்களவர்களுக்கு மட்டுமே உரித்தான பொதுவான சட்டங்களை நாடு முழுவதும் திணித்து, இது சிங்களவர் நாடு என்ற பேரினவாத ஆதிக்கத்தைத் திணிக்கும் ஒரு விவகாரமாகவும் –

விசேட சட்டங்கள் மூலமும், அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் வாயிலாகவும் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ள உரித்துகளை நாடு முழுவதற்கும் ஒரே சட்டம் என்ற பெயரில் பிடுங்கும் மேலாதிக்க அடக்குமுறையாகவும் –

சிறுபான்மை இன மக்கள் அச்சத்துடன் நோக்குகின்றனர்.

அந்தப் பேரினவாத மேலாண்மை வெறித்தனத்தை முழு அளவில் கட்டவிழ்க்கும் கூட்டாகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயலணிக்கு ஞானசாரர் தலைமை தாங்கும் இணைவை நோக்க வேண்டியுள்ளது.

## முழுமையாக தடுப்பூசி பெற்ற இலங்கையருக்கு பிரித்தானியாவுக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி

பிரித்தானியாவிற்குள் பிரவேசிப்பதற்கு நேற்று (திங்கட்கிழமை) முதல் இலங்கையின் தடுப்பூசி சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படும் என இலங்கைக்கான பிரித்தானிய உயர் தூதரகம் தெரிவித்துள்ளது.

அஸ்ட்ராஜெனெகா, பைஸர் மற்றும் மொடர்னா தடுப்பூசி வகைகள் செலுத்தப்பட்டமைக்கான சான்றிதழ் பிரித்தானியாவில் ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி சட்டத்தின் கீழ், சுற்றுலாப் பயணிகள் பிரித்தானியாவிற்கு வருகை தருவதாயின், குறைந்தது 14 நாள்களுக்கு முன்னர் முழுமையாகத் தடுப்பூசி பெற்றிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தேசிய அளவிலான பொது சுகாதார நிறுவனத்தால், சுற்றுலாப் பயணிகளின் பிறந்த திகதி உள்ளிட்ட தரவுகள் உள்ளடக்கப்பட்ட பொருத்தமான தடுப்பூசி சான்றிதழ் வழங்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியை தெரிந்துகொள்வது எமது உரிமை

### கொழும்பு பேராயர் தெரிவிப்பு



ஈஸ்டர் தாக்குதல்களின் பின்னணியை முழுமையாக தெரிந்து கொள்வது தமது உரிமையாகும் என பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதை மாத்திரமே தாம் எதிர்பார்க்கிறோம் எனவும் அதிக பணத்தை வழங்க வேண்டும் என்றோ, ஏனைய வசதி வாய்ப்புக்களை செய்து கொடுக்க வேண்டும் என்றோ தாம் எதிர்பார்க்கவில்லை என்றும் பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை சுட்டிக்காட்டினார்.

நீர்கொழும்பு – கட்டுவப்பிட்டி தேவாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விசேட ஞாயிறு ஆராதனைகளின்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்–

அப்பாவி மக்கள் எவ்வித காரணமும் இன்றி கொல்லப்படுவதற்கு ஏதுவாய் அமைந்த காரணி எது என்பதையே நாம் தொடர்ந்தும் வினவிக் கொண்டிருக்கின்றோம். இதனைத் தெரிந்து கொள்வது எமது உரிமையாகும்.

எனவே உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல்களின் பின்னணியை முழுமையாக வெளிப்படுத்துமாறு நாட்டின் தலைவர்களிடம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றாம். இதனை மீண்டும் அரசியல் தலைவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றோம். மாறாக அதிக பணத்தை வழங்க வேண்டும் என்றோ, ஏனைய வசதி வாய்ப்புக்களை செய்து கொடுக்க வேண்டும் என்றோ நாம் எதிர்பார்க்க வில்லை. – எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நியமனம் புறக்கணிக்கப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் வடக்கு ஆளுநர் செயலக முன்றிலில் போராட்டம்!




நியமனத்தில் புறக்கணிக்கப்பட்ட வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் நீண்ட காலமாக சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றிய 970 பேரில் முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் எடுத்த முயற்சியின் பயனாக 349 பேருக்கு அவர்களது சேவைக்கால அடிப்படையில் அரச நியமனத்துக்கான நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அதில் ஏனையோருக்கு நியமனம் வழங்கப்படாத நிலையில் தமக்கும் குறித்த நியமனத்தை வழங்குமாறு கோரி நேற்று வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்றிலில் நியமனம் வழங்கப்படாத வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுகாதாரத் தொண்டர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாங்களும் நீண்ட காலமாக தொண்டு அடிப்படையில் சுகாதாரத் தொண்டர்களாக கடமையாற்றியிருக்கிறோம் மொத்தமாக 970 பேர் வடக்கு மாகாணத்தில் உள்ளோம்.

ஆனால் 349 பேருக்கு மாத்திரமே நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டு தற்போது அவர்களுக்குரிய நியமனம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது எனினும் நாம் வைக்கின்ற கோரிக்கை என்னவென்றால் வடக்கு மாகாணத்தில் உள்ள 970 சுகாதாரத் தொண்டர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு தற்போது வடக்கு மாகாணத்துக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியே போராட்டத்தில் ஈடுபடுகிறோம் எனத் தெரிவித்தனர்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2021



''நீண்டகாலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்.''

– வாரன் ப∴.வெற்

(அமெரிக்கத் தொழிலதிபர்)

# கொவிட் குணமடைவு 294 ஆல் அதிகரித்தது

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 294 பேர் குணமடைந்து நேற்று (திங்கட்கிழமை) வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 லட்சத்து 13 ஆயிரத்து 92 ஆக அதிகரித்துள்ளது.

அதேபோல், நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 41 ஆயிரத்து 73 ஆக பதிவாகியுள்ளது.

மேலும் கொரோனாத் தொற்றால், 13 ஆயிரத்து 743 பேர் உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.





யாழ்ப்பாணம் எஸ்.ரி. எஸ்.கண் வைத்தியசாலையின் பத்தாவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. வைத்தியசாலையின் நிறுவுநர் கண் சிகிச்சை நிபுணர் எஸ். சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்

# வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் மேலும் 2 நாள்களுக்கு மழை நீடிக்கும்!

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் மேலும் 2 நாள்களுக்கு மழை நீடிப்பதற்கு சாத்தியம் இருப்பதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

தற்போதைய காலநிலை மாற்றம் தொடர்பில் நேற்று (திங்கட்கிழமை) யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகங்ளுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே நாகமுத்து பிரதீபராஜா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி வங்காள விரிகுடாவில் உருவான தாழமுக்கம் மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து தற்பொழுது சிலாபத்துக்கு 67 கிலோமீற்றர் தொலைவில் நிலை கொண்டுள்ளதாக நாகமுத்து பிரதீபராஜா குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு குறித்த தாழமுக்கம் தற்போது சிலாபத்துக்கு மேற்காக நிலைகொண்டிருப்பதால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல பாகங்களுக்கும் தொடர்ச்சியாக இரண்டு நாள்களுக்கு மழை கிடைப்பதற்கான வாய்ப்பு காணப்படுவதாக நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







*Jaffna College Institute of Technology*
*Calls for the following courses*

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

**Commencement in November 2021**
**At Our Jaffna Centre along**
**(Jaffna College Undergraduate dept. Building)**
**464 Hospital Road**
**Jaffna.**
**For further details contact**
**Tel no: 0212250975/0212223382**
**Email: ejcit@sltnet.lk.**



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 179

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



**452. தீர்ப்பாயத்தின் விசாரணைகளிலும் அது தென்பட்டது - எவ்விதமாக?**

தமிழ் மக்களின் தலைவர்களோ, அவர்களது அமைப்புக்களோ. தமிழ் மக்களின் பிரச்சினைகளோ, அந்த பிரச்சினைகளுக்கான தீர்வுகளோ, தாங்கள் சமர்ப்பிக்கும், நெறிமுறைப்படுத்தும் வழியில் பார்க்கப்பட வேண்டும், தீர்க்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு கொண்டவர்களாக இருந்து, இடைப்பட்ட காலங்களில் எழுந்த எத்தனையோ அணுகுமுறைகளை – சந்தர்ப்பங்களை – பிரயோசனப்படுத்தாமல் கடந்து சென்றவர்கள்.

போரின் முடிவிலும் தமிழ் மக்களைப் பிரதிநிதிப்படுத்துகிறோம் எனப் புலம் பெயரில் இருந்து இயங்கும் பிரதான அமைப்புக்கள் மாற்று அணுகுமுறைகளை அனுசரிக்காது, அவற்றை ஏற்றுக் கொண்டாலும், உதட்டளவில் அசைத்துக் கொண்டு, பழிவாங்கலிலும் மோதல் பாதையிலுமே உரிமைப் போராட்டத்தின் நகர்வுகளை மேற்கொள்கிறார்கள்.

உதாரணத்திற்கு, தீர்ப்பாயத்தின் முன் இவற்றை எடுத்துச் சென்ற ஸ்ரீலங்காவின் அமைதிக்கான அயர்லாந்தின் அமைப்பும், பிறீமனிலிருந்து இயங்கிய ஜேர்மனியின் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பும், தாங்கள் கலந்துரையாடிய பல சர்வதேச மனித உரிமைகள், புனர்வாழ்வு அமைப்புக்களின் புத்திமதியில் விசாரணைக்காக போர்க்குற்றங்களும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களும் நடந்தன என்றே பிரச்சினைகளை முன்வைத்தன.

அவர்களுடைய எதிர்பார்ப்பு, சர்வதேச நாடுகள் ஒரு பொது நிலையில்




போர்க்குற்றங்களும், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களும் நடந்தன என்பதை இவ்விதமான அபிப்பிராயங்களில் ஏற்றுக்கொண்டால், அங்கிருந்து மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் இவற்றுக்கும் உதவியாயிருக்கும் என்ற எண்ணங்களே.

ஆனால், பின் இந்த அமைப்புக்களோடு இணைந்து உதவியாக செயற்பட்ட தமிழ் அமைப்புக்கள், தங்களது அறிக்கைகள், சாட்சியங்களின் மூலம் அவை இனப்படுகொலை எனவும் ஆராயப்பட்டு தீர்ப்புத் தரப்படல் வேண்டும் என்பதில் உறுதியாயிருந்தார்கள். இந்த ஆணித்தரமான பிடியினாலேயே தீர்ப்பாயம் டப்ளினில் தங்களது தீர்ப்பைத் தந்து, இனப்படுகொலை அம்சத்தை விசாரிக்க மேலும் சாட்சியங்கள் தன்னிச்சையாக சேகரித்தும், இத்துடன் உதவி தந்த தமிழ் அமைப்புக்களிடமிருந்து பெற்றும், மீண்டும் பிறீமனில் கூடி ஆராய்ந்து தனது தீர்ப்பையும் அபிப்பிராயங்களையும் தெரிவித்தது.

அதன்போது இதன் அணுகுமுறையைச் சுட்டிக்காட்டாமல் விடவில்லை. புத்தியும் தந்தது.

**453. தீர்ப்பாயம் இனப்படுகொலை நடந்தது, நடக்கிறது என்று தானே தீர்ப்பு தந்தது?**

அந்த அபிப்பிராயங்கள் – தீர்ப்பு – தமிழ் மக்களுக்கான பலத்த ஆதாரத்தைத் தந்ததோடு சர்வதேசத்தில் ஒரு உந்து சக்தியோடு நடமாடவும் வைத்தது. இவைபோரின் பின்னான காலமாதலால் தமிழ் மக்கள் மேற்கொள்ள வேண்டிய பாதைகளும் நெளிவுசுழிவுகளை அறிந்து ஏற்படுத்தப்பட்டவையாகவும் இருப்பது முக்கியம்.



நாங்கள் விடாக்கண்டர்கள்தான், கடைசி வரை எங்கள் கோரிக்கையை விட்டுக் கொடுக்கப் போவதில்லை,நீங்கள் கொடாக் கண்டர்களதான் என நிற்பது எவ்வளவு யதார்த்தமில்லையோ அதற்கு மேல் யதார்த்தமற்றது சர்வதேசத்துடன் உரசி கொண்டு உபத்திரவம் கொடுப்பது.

தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வை அவர்கள் இன்றிருக்கும் நிலையில் சர்வதேசத்தின் ஆதரவுடன்தான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நியதியை அவர்கள் கண்கூடாக கண்டு கொண்டும், சர்வதேசமே பங்குபற்றி போரை நடத்தியது எனத் தெரிந்தும் மறு சிலம்பை கையிலெடுத்துக்கொண்டு மதுரை பாண்டியனிடம்நீதிகேட்ட கண்ணகி. மதுரையை எரித்தால் அவள் நீதிக்குப் போராடிய தமிழ் மக்களின் முன்னோடி என்று அவள் பாணியிலேயே நவீன பாண்டியர்களோடு போராடுவதும் ,இன்றைய சூழல்களில் நடைபெற, சர்வதேசம் நீதியென்ற அச்சாணியில் சுழல்வதில்லை என்பது பல தடவைகள் பலரால் சொல்லப்பட்டுள்ளது.

ஆதலால் பழிவாங்கலின் அடிப்படையும் மோதல் அணுகுமுறையும் சூழலுக்கேற்ற அரசியலோ அல்லது ராணுவ தந்திரமோ அல்ல.

அவை தமிழ் மக்களைப் பின் நிற்கச் செய்து, இணக்கமாகச் செயற்படுவோரோடு முன்னோக்கிச் செல்லும்.

**454. எதனைக் குறிப்பிடுகிறீர்கள்?**

தீர்ப்பாயத்தின் முன்னே இணையாக உதவி புரிந்த தமிழ் அமைப்புக்கள், இழைக்கப்பட்ட அட்டூழியங்கள் இனப்படுகொலை எனவும் தீர்ப்புத் தர வேண்டும் எனக் கோரியமை நியாயமானதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமே. போர்க் குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான செய்கைகள்,

மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுடன் இணைந்து இனப்படுகொலை என தீர்மானிக்கப்படுவது ராஜபக்ஷக்களின் குரக்கன் சால்வை போல் அவர்களைத் தனிப்படுத்திக் காட்டும் ஓர் அங்கி போன்றது. ஆனால் அத்தோடு சர்வதேச நாடுகளை – குறிப்பாக இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா போன்றவை – இனப்படுகொலை புரிவதற்கு ஸ்ரீலங்காவுக்குத் துணை போனார்கள் எனக் கேட்டு விடாக்கண்டர்களாக அவர்களைப் பழி வாங்க நிற்பதும், அதற்கான மோதல்களும் புத்திசாதுரியமல்ல. நாணல் மாதிரி வளைந்தும் நிமிரவும் தமிழ் சாணக்கியர் சொல்லிக் கொடுத்துள்ளார்கள்.

பழிவாங்கல், மோதல் அணுகுமுறையை முன்னெடுத்து, அந்த நாடுகளை அந்நியப்படுத்தி, அவை தொடர்ந்தும் ஸ்ரீலங்காவோடு தங்களது நலன்களுக்காக இயங்கவைத்திருக்கிறோம் என்ற புரிதல் இருந்ததில்லை.

இதே அணுகுமுறையை தமிழ்மக்கள் கைபிடித்து, அதேசமயம், அவர்களிடம் நீதியும் அரசியல் தீர்வுக்கும் ஆதரவு கேட்க, சர்வதேசமும் அவர்களிடம் கேட்பது போல் கேட்டு, தொட்டிலையும் ஆட்டி பிள்ளையைக் கிள்ளிவிடுகிறது. ஆராரோ பாடுகின்றது – இன்று 12 வருடங்கள் கடந்தும்.

(வளரும்....)

# கோட்டாபய தங்கியிருந்த விடுதியை சூழ்ந்துகொண்ட புலம்பெயர் தமிழர்கள்






ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ காலநிலை மாற்ற மாநாட்டில் பங்கெடுப்பதற்காக ஐக்கிய ராச்சியத்தின் கிளாஸ்கோ நகரில் தங்கியிருந்த விடுதியை நேற்று (திங்கட்கிழமை) அதிகாலையிலேயே சூழ்ந்துகொண்ட புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட ஆரம்பித்தனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளாஸ்கோ நகரின் Dunblane, Hydro Perth Rd இலுள்ள Hilton Hotel இல் மாநாட்டில் கலந்து கொள்ள வந்துள்ள பல உலகத் தலைவர்கள் தங்கியிருக்கின்ற நிலையில், அங்கு தங்கியிருக்கும் கோட்டாபயவுக்கு எதிராக நேற்று அதிகாலை முதல் கோஷங்களை எழுப்பி தமது எதிர்ப் புக்களைத் தொடர்ந்து தெரிவித்துக்கொண்டிருந்தார்கள்.

'ராஜபக்ஷ ஒரு போர் குற்றவாளி', 'மனித உரிமைகளை மீறுபவர்', 'கொலையாளி' என்று பல்வேறு கோஷங்கள் அங்கு எழுப்பப்பட்டுக்கொண்டிருந்தன என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராஜபக்ஷவுக்கு எதிராக புலம்பெயர் தமிழர்கள் பல்வேறு வடிவங்களில் மேற்கொண்டுவருகின்ற போராட்டங்கள் ஓயாத அலைகளாகத் தொடர்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

# 5 வயது சிறுமி உட்பட மூவர் நீரில் மூழ்கி சாவு

ஐந்து வயது சிறுமி உட்பட மூவர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக, மொனராகலை, தம்பகல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீகஹப்பிட்டிய வாவியில் மீன்பிடிக்கச்சென்றநபர் ஒருவர் நீரில் மூழ்கியுள்ளார்.

குறித்த நபரை மீட்டு தம்பகல்ல வைத்தியசாலையில் சேர்த்தபோது அவர் மரணமடைந்துள்ளார் என்று தம்பகல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீகஹப்பிட்டிய, தம்பகல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயது நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தம்பகல்ல வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, களுத்துறை இங்கிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பான ஆற்றில் குளிப்பதற்காகச் சென்ற 68 வயது நபரும், 5 வயது சிறுமியும் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளனர்.

நீரில் மூழ்கியவர்களை உடனடியாக மீட்டு இங்கிரிய வைத்தியசாலையில் சேர்த்த போதிலும், அவர்கள் ஏற்கனவே மரணமடைந்துவிட்டனர் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இங்கிரிய, ஊருகல பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இருவரின் சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக இங்கிரிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

# 'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணியின் சட்டவரைபில் பொதுபல சேனாவின் முன்மொழிவும் உள்ளடங்கும்!

## ஞானசாரர் திட்டவட்டம்



'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணியால் தயாரிக்கப்படும் சட்டவரைவில் பொதுபல சேனா அமைப்பின் முன்மொழிவுகளும் உள்ளடக்கப்படும் என குறித்த செயலணியின் தலைவரும் அந்த அமைப்பின் செயலாளருமான கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பொதுபல சேனா அமைப்பு எழுப்பிய பிரச்சினைகள் இன்றும் அவதானிக்கப்பட வேண்டியவையாக உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் விளைவாக, பொதுபல சேனா எழுப்பிய மற்றும் விவாதிக்கப்பட்ட பிரச்சினைகள் செயலணியால் விவாதிக்கப்பட்டு குறித்த சட்ட வரைவில் இணைத்துக்கொள்ளப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக செயலணிக்கு நன்கு தெரியும் எனவும் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

பிரிந்து செல்வதன் மூலம் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசமைப்பின் 33ஆம் உறுப்புரையால், ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்பதற்கான ஜனாதிபதி செயலணி பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையில் ஸ்தாபிக் கப்பட்டது.

இந்த செயலணியில் தமிழ் பிரதிநிதிகள் யாரும் உள்ளடக்கப்படவில்லை. இதனையடுத்து, இந்த விடயம் தொடர்பாக பெருமளவில் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(மற்றொரு செய்தி 10ஆம் பக்கத்தில்...)

# உத்தரப் பிரதேச அரசு இலங்கைக்கு அழைப்பு

## தீபோத்ஸவ் நிகழ்வுக்காக



உத்தரப்பிரதேசத்தின் அயோத்தியில் 2021 நவம்பர் 1 முதல் 5ஆம் திகதி வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரமாண்டமான தீபோத்ஸவ் நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக இலங்கையிலிருந்து 15 பேர் கொண்ட கலாசார குழு ஒன்று இந்தியாவின் உத்தரப் பிரதேச அரசாங்கத்தால் அழைக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள இந்திய உயர் தூதரகம் வெளியிட் டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் –

இராமாயணத்தின் உலகளாவிய கலைக்களஞ்சியத்தின் இலங்கைப் பிரிவின் உறுப்பினர்களான ஞானகுமார் சிதம்பரம் மற்றும் காயத்திரி சுவீந்திரன் ஆகியோரும் கொழும்பிலுள்ள, சுவாமி விவேகானந்தா கலாசார மையம் மற்றும் நாட்டிய கலா மந்திர ஆகியவற்றின் புகழ்பெற்ற பரத நாட்டிய குருவான கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனும் இந்தக் குழுவுக்குத் தலைமை தாங்குகின்றனர்.

இந்தக் கலாசாரக் குழுவினரின் பயணத்துக்கு முன்னதாக இந்திய உயர் ஸ்தானிகர் ஸ்ரீ கோபால் பாக்லே இந்தக் குழுவினரைச் சந்தித்து உரையாடியிருந்தார். இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பல நூற்றாண்டுகள் பழைமையான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் இத்தகைய கலாசார மற்றும் ஆன்மீக தொடர்புகளின் முக்கியத்துவத்தை அவர் இச்சந்திப்பின் போது எடுத்துரைத்தார்.

மேலும் இந்தியாவில் அவர்களின் கலாசார நிகழ்ச்சிகளுக்காக வாழ்த்துக்களையும் அவர் பகிர்ந்துகொண்டார். உத்தரப்பிரதேச அரசின் கலாசாரத் திணைக்களத்தின் அயோத்தி ஆராய்ச்சி நிறுவனம் இலங்கையிலிருந்து 15 பேர் கொண்ட இந்தக் கலாசார குழுவை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலத்தில் புனித நதியான சரயுவின் கரையில் அயோத்தி அமைந்துள்ளது. இது இராமர் பிறந்த இடம் என நம்பப்படுவதால் இந்துக்களின் மிக முக்கியமான புனித யாத்திரை தலமாகக் கருதப்படுகிறது. இந்நிலையில் இங்கு பிரமாண்டமான ஆலயம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

2017 ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு ஆண்டும், உத்தரப் பிரதேச அரசு அயோத்தியில் தீபாவளியை முன்னிட்டு தீபோத்ஸவ் என்ற விழாவைக் கொண்டாடுகிறது. இந்த ஆண்டு நடைபெறும் ஐந்தாவது தீபோத்ஸவ் பதிப்பின்போது, முதன்முறையாக 500 ட்ரோன்கள் அயோத்தியின் வானத்தில் இராமாயணக் காட்சிகளைச் சித்திரிக்கவுள்ளன.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், இலங்கை உட்பட உலகம் முழுவதிலுமிருந்து வரும் கலாசாரக் குழுக்கள் ராமாயணத்தை அடிப்படையாகக் கொண்ட கலாசார நிகழ்ச்சிகளை இங்கு காட்சிப்படுத்துவார்கள். தீபாவளியை முன்னிட்டு நவம்பர் 3 ஆம் திகதியன்று 12 லட்சம் தீபங்கள் ஏற்றி சாதனை படைக்க உத்தரபிரதேச அரசு திட்டமிட்டுள்ளது.

அயோத்தியில் நடைபெறும் தீபோத்ஸவ் கொண்டாட்டங்களின் போது சரயு நதியின் கரையில் அமைந்திருக்கும் கம்பீரமான 'ராம் கி பைதியில்' பாரம்பரிய சுற்றுலா, மாநாடு, புத்தக வெளியீட்டு விழா, இராமாயண ஊர்வலம் படக் கண்காட்சி, முப்பரிமாண ஒளிக்கீற்று காட்சிகள், திட்ட பிரதிமைகளின் திரையிடல் மற்றும் லேசர் ஒளிக்கற்றை காட்சிகள் உள்ளிட்டவை நடைபெறவுள்ளன.

நுவரெலியாவில் உள்ள சீதை அம்மன் ஆலயத்திலிருந்து அனுப்பப்பட்ட ஓர் அடையாள புனித சின்னம் அயோத்தியில் உள்ள ராம ஜென்மபூமி ஆலய தலைமை குருவிடம் இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவால் 2021 ஒக்ரோபர் 28 ஆம் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. இந்தப் புனித சின்னம் இலங்கையில் உள்ள சீதை அம்மன் ஆலயத்திலிருந்து உயர்ஸ்தானிகரால் இந்தியாவிற்கு எடுத்துவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி மங்களகரமான போயா தினத்தன்று கொழும்பிலிருந்து புனித நகரமான குஷிநகருக்கு முதலாவது சர்வதேச விமானம் வந்தடைந்தமை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவில்கொள்ளப்படவேண்டியதாகும்.

இலங்கையிலிருந்து இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர் மற்றும் டிஜிற்றல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தலைமையிலான குழு இந்த நிகழ்வுகளில் பங்கேற்றமையுடன் இந்தக் குழுவில் 4 இராஜாங்க அமைச்சர்கள், சிரேஷ்ட அதிகாரிகளுடன் இலங்கை முழுவதிலும் உள்ள பல்வேறு பிரிவுகள் மற்றும் புனித விகாரைகளைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட சிரேஷ்ட பௌத்த மதகுருமாரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அதி வணக்கத்திற்குரிய மகாசங்கத்தினரும் உள்வாங்கப்பட்டிருந்தனர். இத்தகைய கலாசார மற்றும் ஆன்மிக நிகழ்வுகள் மதங்களை கடந்து இரு நாடுகளுக்கும் இடையே உள்ள நிலையான மக்கள் – மக்கள் தொடர்பை உறுதிப்படுத்துகின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆரம்பக் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அரசு கலந்துரையாடலை முன்னெடுத்துள்ளது

## வியாழேந்திரன் பெருமிதம்



பிள்ளைகளின் ஆரம்பக் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அரசாங்கம் அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் தொடர்பில் கலந்துரையாடலை முன்னெடுத்துள்ளது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) முன்பள்ளி மாணவர்களின் சுகாதார நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கும் நிகழ்வில் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்–

கொரோனா காரணமாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் ஸ்தம்பித்தது மீண்டும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது அந்த வகையில் முன்பள்ளி மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேலும் ஊக்குவிக்க பல்வேறு வேலைத்திட்டங்கள் கல்வி அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதில் ஒரு கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் 223 முன்பள்ளி பாடசாலைகளுக்கு தலா ஒரு பாடசாலைக்கு 6 லட்சம் ரூபா என்ற வகையில் உபகரணங்கள் பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. முன்பள்ளி மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக முன்பள்ளி ஆசிரியர்கள் பல்வேறு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

இவர்களின் மாதாந்தக் கொடுப்பனவு ஓய்வு ஊதியம் பெற்றுக் கொடுப்பது தொடர்பிலும் அரசாங்கம் அவதானம் செலுத்தி கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளது. விரைவில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் இதன்போது தெரிவித்தார்.

# சீரற்ற காலநிலை; இரண்டு பேர் சாவு!

## 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற கால–நிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்கி இருவர் உயிரிழந்துள்ளமையோடு, இருவர் காயமடைந்துள்ளனர்.

அதன்படி, கடும் மழை காரணமாக பதுளை மாவட்டத்தில் ஒருவரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மின்னல் தாக்கி ஒருவரும் உயிரிழந்துள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று (திங்கட்கிழமை) காலை வெளியிட்டுள்ள அறிக்கையின்படி நாடளாவிய ரீதியில் 5 மாகாணங்களில், 7 மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, இரத்தினபுரி, நுவரெலியா, கண்டி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், பதுளை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த மாவட்டங்களில் வசிக்கும் ஆயிரத்து 344 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 373 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 55 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு, மூன்று வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளமையுடன், 352 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு அருகில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் சீரற்ற காலநிலை நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு அண்மையில் குறைந்த அழுத்தப் பிரதேசம்

## 100 மி.மீக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி

இலங்கைக்கு அண்மையாகக் குறைந்த அழுத்தப் பிரதேசம் தொடர்ந்தும் காணப்படுவதால், நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. குறிப்பாக மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மி.மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி பெய்யுமென அந்தத் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் 50 மி.மீக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும் என்பதோடு, மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அந்தத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# நிமலன் சௌந்தரநாயகம் நினைவாக இரத்த தானம்

**க.விஜயரெத்தினம்**

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ஆசுலி நிமலன் சௌந்தரநாயகம் அவர்களின் 21 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 'மாபெரும் இரத்ததான முகாம்' இடம்பெறவுள்ளது.

முறக்கொட்டாஞ்சேனை கிராம அபிவிருத்திசங்க மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை(07.11.2021)காலை 9.30 மணியளவில் இந்த முகாம் இடம்பெறவுள்ளது.'உதிரம் கொடுத்து உயிர்காக்கும் உன்னத பணியில் அனைவரும் இணைந்து உதிரம்கொடுத்து அன்னாரின் நல்ல பணியை நினைவூட்டி ஒற்றுமையுடன் தமிழ்மக்களுக்கு சேவை செய்வோம்' என ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் இரத்ததானம் இடம்பெறவுள்ளது.



# சீனாவின் சேதனப் பசளைக் கப்பல் இலங்கை கடற்பிராந்தியத்திற்குள்

பற்றீரியா அடங்கிய சீன சேதனப் பசளையை ஏற்றிய சீனக் கப்பல், இலங்கை கடற்பிராந்தியத்திற்குள் பிரவேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை கடற்படையின் போக்குவரத்து இணையத்தளம் இதனை உறுதி செய்துள்ளது.

## மழையுடன் கூடிய காலநிலை;

# யாழ். மாவட்டத்தில் 247 பேர் பாதிப்பு!

யாழ். மாவட்டத்தில் மழைகாரணமாக 69 குடும்பங்களைச் சேர்ந்த 247 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த இரண்டு நாளாக மழையுடன் கூடிய கால–நிலை காணப்படுவதுடன் குறித்த மழையுடன் கூடிய நிலையின் தாக்கத்தால் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஊர்காவற்துறை, தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 69 குடும்பங்களைச் சேர்ந்த 247 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் நான்கு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டோரின் விவரங்கள் அந்தந்த பிரதேச செயலர் ஊடாகப் பெறப்பட்டு அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பிரான்ஸிலிருந்து 6 வருடங்களின் பின் விமானம் இலங்கையை வந்தடைந்தது

பிரான்ஸில் இருந்து 6 வருடங்களுக்கு பின்னர் முதல் விமானம் இலங்கையை வந்தடைந்தது.

அதன்படி, ஸ்ரீலங்கன் ஏயர் லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் 200 பயணிகளுடன் நேற்று (திங்கட்கிழமை) காலை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது.

பிரான்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையிலான நேரடி விமான சேவைகள் 6 வருடங்களுக்குப் பின்னர் ஞாயிற்றுக்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் யு.எல். 563 ஞாயிறு அதிகாலை ஒரு மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பிரான்ஸின் பாரிஸில் உள்ள விமான நிலையத்திற்கு சென்றது.

இதேநேரம், ஒவ்வொரு புதன், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பாரிஸ் விமான நிலையத்துக்கு செல்லும் என்றும் அதே நாளில் பிரான்ஸில் இருந்து இலங்கைக்கு மற்றொரு ஸ்ரீலங்கன் விமானம் வரவுள்ளதாகவும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறியுள்ளார்.

1980 களில் இலங்கைக்கும் பிரான்ஸுக்கும் இடையிலான முதலாவது நேரடி விமான சேவை ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் 2015 இல், இந்த நேரடி விமானங்கள் நிறுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.



# 3 ஆயிரத்து 700 குடும்பங்களுக்கு யாழில் மின்சார இணைப்பு இல்லை

யாழ்ப்பாணம், நவ. 02

இலங்கை மக்கள் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவால் ஏற்பாடு செய்யப்படும் மின்சார பாவனையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பான முன்னேற்பாட்டு கலந்துரையாடல் நேற்று (திங்கட்கிழமை) காலை யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தில் மின்சார பாவனையாளர்கள் மின்சார விநியோகம் தொடர்பில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவற்றைத் தீர்ப்பது தொடர்பில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளரால் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

குறிப்பாக மின்சார பாவனையாளர் புதிய மின்சார இணைப்பு பெறல், மின்சாரக்கட்டண அறவீட்டுப் பிரச்சினை, மின்சாரப் பட்டியல் பிரச்சினை , மின்சார கணக்கில் பெயர் மாற்றம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக இலங்கை மின்சார சபை மற்றும் மின் பாவனையாளர்களிடையே இணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்படவுள்ள நடமாடும் சேவையில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு எட்டப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரச அதிபர் ம.பிரதீபன், யாழ் மாவட்ட செயலக தரவுகளின்படி தற்போது வரை மின்சாரம் பெற்றுக் கொள்ளாத 3 ஆயிரத்து 700 குடும்பங்களுக்கும் குறித்த நடமாடும் சேவையின் மூலம் மின்சார இணைப்பை பெற்றுக் கொடுப்பதற்குரிய ஏற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பில் சாதகமாக பரிசீலிக்குமாறு தெரிவித்தார்.

மேலும் மின்சார பாவனையாளர்கள் தமது பிரச்சினைகளை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவால் வழங்கப்பட்டுள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து உரிய காலப்பகுதிக்குள் தத்தமது கிராம உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவை தொடர்பில் ஆணைக்குழுவால் ஏற்பாடு செய்யப்படவுள்ள நடமாடும் சேவையின் மூலம் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளர் றொசான் வீரசூரிய, உதவி மாவட்ட செயலாளர் திருமதி ச.கி.நி.கமலராஜன், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பாவனையாளர் அலுவல்கள் உத்தியோகத்தர் மொகமட் நகான், உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்(நிர்வாகம்), கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கீரிமலையில் கடற்படை காணி சுவீகரிப்பில்!

### இன்று எதிர்ப்பு நடவடிக்கை

யாழ்.கீரிமலையில் கடற்படையின் தேவைக்காக தமிழ் மக்களுக்குச் சொந்தமான சுமார் 0.6474 ஹெக்டேயர் காணிகளை கடற்படையின் தேவைக்காக சுவீகரிப்பதற்கு இன்று அளவீட்டுப் பணிகள் இடம்பெறவுள்ளன.

கீரிமலை - நகுலேஸ்வரம் ஜே/226 கிராமசேவகர் பிரிவில் இன்று காலை 8.30 மணிக்கு குறித்த காணி சுவீகரிப்பிற்கான அளவீட்டுப் பணிகள் இடம்பெறவுள்ளன.

இந்நிலையில் காணி உரிமையாளர்களின் ஒப்புதல் இல்லாமலே அளவீட்டுப் பணிகள் இடம்பெறவுள்ள நிலையில் காணி அளவீட்டை தடுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து காணி உரிமையாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

### கரன்னகொட விவகாரம்;

## இரகசிய அறிக்கையை தாக்கல் செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையை மீளப்பெறுவதற்கான காரணங்களை விளக்கி இரகசிய அறிக்கையை தாக்கல் செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (திங்கட்கிழமை) சட்டமா அதிபருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

சட்ட மா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே, கரன்னகொடவுக்கு எதிரான குற்றப்பத்திரிகைகளை மீளப்பெற்றமை தொடர்பில் தொகுக்கப்பட்ட இரகசிய அறிக்கையை தமது திணைக்களம் வைத்துள்ளதாகத் தெரிவித்ததோடு, அதனை இரகசிய அறிக்கையாகத் தாக்கல் செய்வதற்கு நீதிமன்றத்தின் அனுமதியையும் கோரினார்.

இதன்படி, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சோபித ராஜகருணா மற்றும் நீதியரசர் தம்மிக்க கணேபொல ஆகிய இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு, இந்த அறிக்கையை இன்று (செவ்வாய்க்கிழமை) நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சட்ட மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட மீது குற்றச்சாட்டுகளை தொடர முடியாது என சட்ட மா அதிபர் திணைக்களம் அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பல்கலையுடன் பனை ஆராய்ச்சி நிலையம் கூட்டு ஆய்வு நடவடிக்கை பற்றி ஆராய்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும், பனை அபிவிருத்தி சபையும் இணைந்து மேற்கொள்ளவுள்ள ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பிலான பூர்வாங்க சந்திப்பு நேற்று (திங்கட்கிழமை) பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

பனை அபிவிருத்தி சபையால் முன்மொழியப்பட்டுள்ள ஆய்வு நடவடிக்கைகளில் இரு தரப்பினதும் பங்குபற்றலுடன் நேற்றைய சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டது.

பனை அபிவிருத்தி சபையின் சார்பில் அதன் தலைவர் கிரிசாந்த பத்திராஜா, அதன் பணிப்பாளர் சபை உறுப்பினரும், பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசகருமான பேராசிரியர் சு. மோகன்தாஸ், பனை அபிவிருத்தி சபையின் பிரதிப் பொது முகாமையாளரும், பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் தர நிர்ணய முகாமையாளருமான எஸ். விஜேந்திரன் ஆகியோர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.



## வடக்கு மாகாண விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபடத் திட்டம்

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக இன்று கண்டனப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட இணைப்பாளர் எஸ்.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

இன்று முன்னெடுக்கப்படவுள்ள போராட்டம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும் போதே எஸ்.பிரபாகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் விவசாயிகள் கால்நடை வளர்ப்போர் பெரும் இடர்களை எதிர்நோக்கி வருகின்றனர். அரசால் உர இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதோடு கால்நடைகளுக்கான தீவனம் பெறுவதில் இடர்பாடு காணப்படுவதால் விவசாயிகள் கால்நடை வளர்ப்போர்,பண்ணையாளர்கள் பெரும் இடரை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

விவசாயிகள் கால்நடை வளர்ப்போர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நீதி கோரி இன்று (செவ்வாய்க்கிழமை) வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்னால் கண்டனப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதோடு வலி வடக்கு பகுதியில் நல்லாட்சி அரசாங்கத்தின் போது தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் முதல் கட்ட நிதி மட்டுமே பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலதிகமான நிதி வசதிகள் இன்றுவரை மக்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே பாதிக்கப்பட்ட அனைவரும் ஒன்றிணைந்து இன்று மாகாண ஆளுநர் செயலகத்தின் முன் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட உள்ளதோடு யாழ் மாவட்ட செயலகத்திலுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அலுவலகத்துக்குச் சென்று மகஜரும் கையளிக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## கொரோனாவின் புதிய வகை பிறழ்வு இலங்கைக்குள் நுழையும் அபாயம்!

### பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொரோனா வைரஸின் ஜி.30 என்ற புதிய வகை பிறழ்வு இலங்கைக்குள் நுழையும் அபாயம் இருப்பதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தெரிவித்துள்ள அந்த சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண, ஏனைய நாடுகளில் முன்னர் கண்டறியப்பட்ட அனைத்து கொரோனா வைரஸின் பிறழ்வுகளும் குறுகிய காலத்துக்குள் இலங்கையில் கண்டறியப்பட்டன எனத் தெரிவித்தார்.

அதேபோல, இந்த புதிய மாறுபாடும் நாட்டில் எந்த நேரத்திலும் அடையாளம் காணப்படலாமென அவர் தெரிவித்தார். இந்த புதிய மாறுபாடு நாட்டுக்குள் நுழைந்து பரவத் தொடங்கினால், நிச்சயமாக ஒரு பேரழிவு சூழ்நிலை ஏற்படும் என்று அவர் எச்சரித்தார்.

எனவே, சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு பொதுமக்களை அவர் வலியுறுத்தினார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு மீனவப் பிரதிநிதிகள் இந்தியத் தூதருடன் பேச்சு!

## சுமந்திரனின் ஏற்பாட்டில் கொழும்பில்



**தமிழக – இலங்கை மீனவர்கள் இடையேயான முறுகல் நிலையைத் தனித்து முரண்பாட்டை களைவதற்கான முயற்சியாக வடபகுதி மீனவர்களின் பிரதிநிதிகளை கொழும்புக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே நேற்று மாலை கொழும்பில் சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பை ஏற்பாடு செய்திருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரனும் சந்திப்பில் பங்குபற்றினார்.**

இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எஸ். சுகிர்தன் வழிகாட்டலில் மீனவர் பிரதிநிதிகள் குழு வடக்கிலிருந்து கொழும்புக்கு விசேடமாக வருகை தந்து நேற்று மாலை இந்தியத் தூதுவருடன் விரிவான பேச்சுக்களில் ஈடுபட்டது.

கடந்த வாரம் கொழும்புக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை அவரது இல்லத்தில் சென்று சந்தித்தார் என்பது தெரிந்ததே. அச்சந்திப்பில் சுமந்திரனும் பங்குபற்றியிருந்தார். அந்தச் சந்திப்பில் ஏற்பட்ட இணக்கத்தின் அடிப்படையிலேயே நேற்றைய மீனவர் சந்திப்பு ஒழுங்குபடுத்தப்பட்டதாகத் தெரிகின்றது. இந்தச் சந்திப்பு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் உள்ள மண்டபத்தில் இல்லத்தில் நடைபெற்றது.

இந்த பேச்சுக்களில் விவரம் நேற்று மாலைக்குப் பின் வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்தப் பேச்சுக்களில் பின்வரும் பிரதிநிதிகள் பங்கு பற்றினர்.

- எஸ். சுகிர்தன் - முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர்
- என்.வி.சுப்பிரமணியம் - தலைவர், வடமாகாண கடல் தொழிலாளர் இணையம்
- ஜே.பிரான்சிஸ் - உப தலைவர், வடமாகாண கடல் தொழிலாளர் இணை யம்
- ஏ.மரியராசா - பொருளாளர், வட மாகாண கடல்தொழிலாளர் இணையம்
- அன்ரனி யேசுதாஸன் - தேசிய மீனவர் நல்லிணக்க வடக்கு கிழக்கு இணைப்பாளர்
- வி.அருள்நாதன் - தலைவர்,முல்லைத்தீவு அன்னை வேளாங்கண்ணி கடல் தொழிலாளர் கூட்டுறவு சங்கம்.

## 28 பேர் கைது!

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறிய குற்றச்சாட்டில், நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 28 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக இதுவரை தனிமைப் படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 81 ஆயிரத்து 549 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## குழு மோதலில் ஒருவர் மரணம்

இரு குழுவினருக்கு இடையே ஏற்பட்ட மோதலின்போது மேற்கொள்ளப் பட்ட துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் தாக்குதலில் ஒருவர் மரணமடைந்ததுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

காலி, ஊருகஸ்மங்சந்தி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கருவலகொட பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் நேற்று வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் மடக்கும்புர, கரன்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயது நபரே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த நபர், துப்பாக்கியுடன் மற்றுமொருவரை அழைத்துக் கொண்டு களுவலகொட பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்கு சென்று துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளர். இந்தச் சம்பவத்தில், குறித்த வீட்டிலிருந்த பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதையடுத்து வீட்டிலிருந்த நபர், துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபர் மீதும் அவருடன் சென்ற நபர் மீதும் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

இதன்போதே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபர் மரணமடைந்துள்ளார். சம்பவத்தில் படுகாயமடைந்த பெண்ணும், நபரும் எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# கொரோனா அதிதீவிரம்; மக்களே மிக அவதானம்!

## இராணுவத் தளபதி எச்சரிக்கை





நாட்டில் சில கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ள போதிலும், கொரோனாத் தொற்று நோய் இன்னும் அதிகமாகப் பரவி வருவதால் மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டி இராணுவ வைத்தியசாலையில் நேற்று முன்னணி இராணுவத்தினருக்குப் பூஸ்டர் தடுப்பூசியை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்றாடம் 500 முதல் 600 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் நிலையில் பொதுமக்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். இல்லையெனில் எதிர்காலத்தில் கொரோனாத் தொற்றாளர்களது எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்.

மக்களின் வாழ்க்கையைக் கருத்தில் கொண்டு மாகாணங்களுக்கு இடையேயான கட்டுப்பாடுகள் உட்பட பல்வேறு கட்டுப்பாடுகளை நீக்குவதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

எனவே, மக்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி பெறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் - என்றார்.

## செயலணியில் தமிழ்ப் பிரதிநிதிகள் அவசியத்தை ஏற்றுக்கொள்கின்றேன்

### ஞானசார தேரர் பகிரங்க அறிவிப்பு

'ஒரே நாடு ஒரே சட்டம்' என்பதற்கான ஜனாதிபதி செய லணிக்குத் தமிழ்ப் பிரதிநிதிகள் அவசியம் என்பதை தாம் ஏற்றுக் கொள்கிறேன் என அதன் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

இந்தச்செயலணிதொடர்பில்காணொலி ஊடாக நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசிய அரசியல் தரப்பினர் தங்களுக்கான வாக்குகள் குறித்தே கவனம் செலுத்துகின்றனர்.

வடக்கு, கிழக்கில் மத ரீதியான பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனினும், தெற்குடனான மதப் பிரச்சினை குறித்து கருத்துரைக்கின்றனர்.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை நாம் நன்கு அறிந்துள்ளோம்.

இந்நிலையில், தற்போது வாய்ப்பு கிடைத்துள்ளது. இதன் ஆரம்பத்திலேயே அதில் உள்ள குறைபாடுகளைக் கூறி பிரச்சினைகளை ஏற்படுத்தாமல் முதலில் அதன் திட்டங்களை வகுப்பது முக்கியமானதாகும்.

இந்த நாட்டில் சிறுபான்மை என்று ஒரு இனம் இல்லை.

நாட்டில் இலங்கையர்கள் என்ற இனம் மாத்திரமே இருக்கின்றது. இன ரீதியாக யாரையும் பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -076 443 8622
காலைக்கதிர் Kalaikkathir

# கிளாஸ்கோ நகரில் நேற்று உள்ளேயும் வெளியேயும்...

உள்ளே...






வெளியே...





